**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement -19 ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

1) தான் பெற்றதைப் பிறருக்கும் வழங்கும் புலவர் யாரென புறநானூறு புலப்படுத்துகிறது?

A) பெருஞ்சித்திரனார் B) பெரும்பதுமனார்

C) பசுங்குடையார் D) அப்படி யெவரும் இலர்

2) "தேவர் அனையர் கயவர் அவரும்தாம் / மேவன செய்தொழுக லான்" - இக்குறளில் பயின்று வரும் அணி?

A) வஞ்சப் புகழ்ச்சி அணி B) உருவக அணி

C) எடுத்துக்காட்டு உவமையணி D) உவமையணி

3) தமிழ்நாடு, பாரதமணி, பாரதிதேவி, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் ஆசிரியராக பணியாற்றியவர் யார்?

A) ந.முத்துசாமி B) சா.கந்தசாமி

C) ஜெயகாந்தன் D) கு.ப.ராஜகோபாலன்

4) "சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி" என்று ஐம்பெருகாப்பிய வைப்புமுறையைக் கூரும் நூல் எது?

A) திருத்தணிகையுலா B) தமிழ்விடுதூது

C) அழகர் கிள்ளை விடு தூது D) திருவந்தாதி

5) 'வேருக்கு நீர்' எனும் நாவலுக்காக சாகித்திய அகாதமி விருது வாங்கியவர் யார்?

A) சுஜாதா B) ராஜம் கிருஷ்ணன்

C) இந்திரா பார்த்தசாரதி D) கிருஷ்ணம்மாள் ஜெகன்நாதன்

6) “இல்லோர் ஒக்கல் தலைவன்”, “பசிப்பிணி மருத்துவன்” என்றெல்லாம் யார் போற்றப்பட்டனர்?

A) அரசர்கள் B) வள்ளல்கள் C) புலவர்கள் D) மன்னர்கள்

7) கண்ணதாசன் எந்த நூலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றார்?

A) சேரமான் காதலி B) அர்த்தமுள்ள இந்துமதம்

C) வனவாசம் D) இயேசு காவியம்

8) வெண்பாவைப் பற்றிய பின்வரும் வாக்கியங்களில் தவறானது எது?

A) ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.

B) இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்று வரும்.

C) இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும். (கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்.)

D) ஏகாரத்தில் மட்டுமே முடியும்

9) ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களை குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தை பரப்புவது அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம் என்றவர் யார்?

A) தி.ஜானகிராமன் B) கு.ப.ராஜகோபாலன் C) அசோகமித்திரன் D) கி.ராஜநாராயணன்

**10)** வீரமாமுனிவர் படைத்த இலக்கண நூல் எது?

A) யாப்பெருங்கலம் B) அமுதசாகரம்

C) வீரசோழியம் D) தொன்னூல் விளக்கம்

**11)** சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

A) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் B) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

C) அறிவியல் முன்னேற்றம் D) வெளிநாட்டு முதலீடுகள்

**12)** காய் மணி, உய்முறை & செய்முறை ஆகியவற்றின் இலக்கணக்குறிப்பு அறிக?

A) பண்புத்தொகை B) வினைத்தொகை

C) வேற்றுமைத் தொகை D) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

**13)** கரகம் எனும் சொல் இடம்பெறும் "நீரற வறியாக் கரகத்து" என்ற வரி இடம்பெறும் நூல் எது?

A) சிலப்பதிகாரம் B) புறநானூறு C) பட்டிணத்தார் பாடல் D) திருவாசகம்

**14)** "தகக தகதகக தந்தத்த தந்தகக என்று தாளம் / பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக" என்று "திருப்புகழில்" அருணகிரிநாதர் எந்த இசைக்கருவியைப் பற்றி குறிப்பிடுகிறார்?

A) மேளம் B) உறுமி C) பறை D) தவில்

**15)** பின்வரும் எந்த வழிபாட்டின் ஒரு பகுதியாக தெருக்கூத்துக் கலை உள்ளது?

A) கண்ணகி வழிபாடு B) அர்ச்சுனன் தபசு

C) மாரியம்மன் வழிபாடு D) திரௌபதியம்மன் வழிபாடு

**16)** "செம்போ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்" எனத்தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடல் எந்த பருவத்தைப் பாடுகிறது?

A) தால் பருவம் B) செங்கீரை பருவம் C) சப்பாணி பருவம் D) முத்தப் பருவம்

**17)** "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்" என புகழப்பெறுபவர் யார்?

A) கம்பர் B) புகழேந்திப் புலவர்

C) மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் D) குமரகுருபர்

**18)** விசாரனைக் கமிஷன் என்ற புதினத்திற்காக சாகித்திய அகாதமி விருது பெற்றவர்?

A) ஜெயகாந்தன் B) சா. கந்தசாமி C) அழகிய பெரியவன் D) வண்ணநிலவன்

**19)** பொருத்துக:

1) குறிஞ்சி - அ) வலியிழந்த யானை

2) முல்லை - ஆ) முதலை, சுறா

3) மருதம் - இ) முயல், மான், புலி

4) நெய்தல் - ஈ) எருமை, நீர்நாய்

5) பாலை - உ) புலி, கரடி, சிங்கம்

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ B) 1-அ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-ஆ

C) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-உ, 5-அ D) 1-உ, 2-இ, 3-ஈ, 4-ஆ, 5-அ

ETW ACADEMY

**20)** பின்வரும் கூற்றுகளில் சரியானது(வை) எது(வை)?

**கூற்று 1:** ம.பொ.சி யின் தன்வரலாற்று நூல் - எனது போராட்டம்

**கூற்று 2:** ம.பொ.சி அவர்களுக்கு 1968ம் ஆண்டு 'சாகித்திய அகாதமி விருதை' பெற்றுத்தந்த நூல் - வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு

**கூற்று 3:** இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்த ஓர் இலக்கியம் உண்டென்றால் அது திருக்குறள் மட்டுமே என்று ம.பொ.சி கூறுகிறார்.

A) அனைத்து கூற்றுகளும் சரி B) அனைத்து கூற்றுகளும் தவறு

C) கூற்று 1 சரி D) கூற்றுகள் 1 & 3 சரி

**21)** இலக்கணக்குறிப்பு தருக: 'பயில்தொழில்'

A) வினைத்தொடர் B) வினைத்தொகை C) பன்புத்தொகை D) தொழிற்பெயர்

**22)** மதுரை சின்னப்பிள்ளையம்மாள் ஆரம்பித்த குழுவின் பெயர் என்ன?

A) நெல் மணிகள் B) பெண் சங்கம் C) சுயவுதவி இயக்கம் D) களஞ்சியம்

**23)** 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே-

A) திருப்பதியும் திருத்தணியும் B) திருத்தணியும் திருப்பதியும்

C) திருப்பதியும் திருச்செந்தூரும் D) திருப்பரங்குன்றமும் பழனியும்

**24)** வள்ளலின் பொருள் இரவலனின் பொருள்; வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று குறிப்பிடுபவர்?

A) பெரும்பதுமனார் B) ஊன் பொதிப் பசுங்குடையார்

C) ஏணிச்சேரி முடமோசியார் D) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

**25)** கோடைவயல் மற்றும் மீட்சி விண்ணப்பம் ஆகிய கவிதைத் தொகுப்புகளின் ஆசிரியர் யார்?

A) தி. சொ. வேணுகோபாலன் B) கவியரசர் கண்ணதாசன்

C) சா.கந்தசாமி D) கல்யாண்ஜி

**26)** மூன்று சீராக வரும் திருக்குறளின் இரண்டாம் அடி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) அளவடி B) சிந்தடி C) சந்தஅடி D) சொல்லடி

**27)** உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்ப டுவோர்

A) உதியன்; சேரலாதன் B) அதியன்; பெருஞ்சாத்தன்

C) பேகன்; கிள்ளிவளவன் D) நெடுஞ்செழியன்; திருமுடிக்கா ரி

**28)** ஜெயகாந்தனுக்கு சோவியத் நாட்டு விருது பெற்றுத் தந்த சிறுகதை தொகுப்பு எது?

A) குருபீடம் B) இமயத்துக்கு அப்பால்

C) யுகசந்தி D) ஒருபிடி சோறு

ETW ACADEMY

29) "ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து / அரசு பட அமர் உழக்கி" - என்ற பாடலடிகள் எந்த நூலில் காணப்படுகின்றன?

A) ஆசாரக்கோவை B) மதுரைக்காஞ்சி
C) பட்டினப்பாலை D) இறையனார் களவியல்

30) கரிசல் எழுத்தாளர்கள் வரிசையில் மூத்தவர் எனப்படுபவர் யார்?

A) கு அழகிரிசாமி B) கி.ராஜநாராயணன் C) டி.கே.சிதம்பரநாதர் D) கரிச்சான் குஞ்சு

31) ஆசிரியர்ப்பா பற்றிய வாக்கியங்களில் தவறானது எது?

A) ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
B) ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும்.
C) ஐந்து அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.
D) ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.

32) "காவடியாட்டம்" என்ற சொல்லில் "கா" என்பதற்கு பொருள் என்ன?

A) வளைந்திருக்கும் வில் போன்ற அமைப்பு B) கட்டப்பட்டிருக்கும் துணி
C) பாரந்தாங்கும் கோல் D) ஆடும் ஆள்

33) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழை எழுதியவர் யார்?

A) குமரகுருபர் B) மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்
C) ஒட்டக்கூத்தர் D) கவிராச பண்டாரத்தையா

34) சா. கந்தசாமி எந்த குறும்படத்திற்காக, அனைத்துலக விருதைப் பெற்றார்?

A) சாயாவனம் B) விசாரனைக் கமிஷன் C) சுடுமண் சிலைகள் D) சூர்யவம்சம்

35) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

A) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் B) ஊரில் விளைச்சல் இல்லாததால்
C) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் D) அங்கு வறுமை இல்லாததால்

36) “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” என்று முழங்கியவர் யார்?

A) ம.பொ.சிவஞானம் B) ராஜகோபாலாச்சாரி
C) தந்தை பெரியார் D) அறிஞர் அண்ணா

37) இலக்கணக்குறிப்பு தருக: 'வண்ணமும்'

A) முற்றும்மை B) அடுக்குத்தொடர் C) வினைத்தொடர் D) எண்ணும்மை

38) நாட்டுப்பண்ணிற்கு நடனம் ஆடிய முதல் மற்றும் இறுதி கலைஞர் யார்?

A) பாலசரசுவதி
B) ராஜம் கிருஷ்ணன்
C) நர்த்தகி நடராஜ்
D) உமா ரகுநாதன்

ETW ACADEMY

**39)** பின்வரும் கூற்றுகளில் எது(வை) சரி?

**கூற்று 1:** 'ஆநிரை கவர்தல்' வெட்சித் திணை எனப்பட்டது.

**கூற்று 2:** கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்கச் செல்லுதல் கரந்தத் திணை ஆகும்.

**கூற்று 3:** மண்ணைக் கவர்தல் வஞ்சித் திணை எனப்படும்.

**கூற்று 4:** நாட்டைக் காக்க, நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, எதிர்த்துப் போரிடல் காஞ்சித் திணை

A) அனைத்து கூற்றுகளும் சரி
B) கூற்றுகள் 1, 2 & 3 சரி; 4 தவறு
C) கூற்று 3 தவறு; 1, 2 & 4 சரி
D) அனைத்து கூற்றுகளும் தவறு

**40)** பதிற்றுப்பத்து எந்த அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது.

A) சேர அரசு
B) சோழ அரசு
C) பல்லவ அரசு
D) பாண்டிய அரசு

**41)** ______ ஓசை வெண்பாவுக்கு உரியது.

A) செப்பல் ஓசை
B) அகவல் ஓசை
C) துள்ளல் ஓசை
D) தூங்கல் ஓசை

**42)** யாப்போசை தரும் பாவோசை பற்றி குறிப்பிடுபவர்?

A) தேவநேயப் பாவாணர்
B) புலவர் குழந்தை
C) ராஜகோபாலன் (எ) சுரதா
D) துரை மாணிக்கம் (எ) பெருஞ்சித்திரனார்

**43)** எண்ணங்கள் என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) கண்ணதாசன்
B) ஜெயகாந்தன்
C) எஸ்.ராமகிருஷ்ணன்
D) எம்.எஸ்.உதயமூர்த்தி

**44)** பின்வரும் எது ஜெயகாந்தனின் நாவல் அல்ல?

A) சுந்தரகாண்டம்
B) பாரீசுக்குப் போ
C) கங்கை எங்கே போகிறாள்
D) ஜே.ஜே சில குறிப்புகள்

**45)** வீரமாமுனிவரின் எளிமையையும் துறவையம் கண்டு வியந்து அவருக்கு இஸ்மத் சன்னியாசி என்ற பட்டத்தை வழங்கியவர் யார்?

A) நானாசாகிப்
B) கான்சாகிப்
C) முதலாம் சரபோஜி
D) சந்தாசாகிப்

**46)** தேம்பாவணியில் உள்ள காண்டங்கள் படலங்கள் மற்றும் பாடல்களின் எண்ணிக்கை முறையே என்ன?

A) 2 - 24 - 2615
B) 3 - 36 - 3615
C) 4 - 48 - 4615
D) 3 - 24 - 2615

**47)** எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும் / சொன் முறை தொடுப்பது தன்மையாகும் - எனும் நூல் எது?

A) யாப்பெருங்கலக் காரியை
B) இறையனார் களவியல்
C) தண்டியலங்காரம்
D) சிறுகாக்கைப் பாடினியம்

**48)** பின்வருவனவற்றுள் "போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலை எது?

A) குடக்கூத்து
B) புரவி நாட்டியம்
C) தேவராட்டம்
D) காவடியாட்டம்

**49)** திருக்குறளில் _________ பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

A) தோற்பாவை
B) குடக்கூத்து
C) மரப்பாவை
D) தெருக்கூத்து

**50)** இலக்கணக்குறிப்பு தருக: ஆடுக

A) ஏவல் வினைமுற்று

B) தொழிற்பெயர்

C) வியங்கோள் வினைமுற்று

D) வினையாலனையும் பெயர்

**51)** பின்வருவனவற்றில் கம்பரின் நூல் அல்லாதது எது?

A) சரசுவதி அந்தாதி

B) சடகோபர் அந்தாதி

C) திணையெழுபது

D) திருக்கை வழக்கம்

**52)** குளிர் காலத்தைப் பெரும்பொழுதாகக் கொண்ட நிலங்கள் ..............

A) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்

B) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

C) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

D) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**53)** கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணையக் காரணமான குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் யார்?

A) மார்ஷல் நேசமணி

B) நம்பூதிரிபாட்

C) மா.பொ.சிவஞானம்

D) சங்கரய்யா

**54)** பொருத்துக

(i) சிற்றகல் ஒளி - 1. கு.ப.ரா

(ii) ஏர் புதிதா - 2. ம.பொ.சி

(iii) மெய்க்கீர்த்தி - 3. இளங்கோவடிகள்

(iv) சிலப்பதிகாரம் - 4. இரண்டாம் இராசராச சோழன்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**55)** சோழமன்னர்களின் சிறப்பை எடுத்தியம்பும் மெய்க்கீர்த்திகளில் இரண்டாம் இராசராசனின் மெய்க்கீர்த்திகள் எத்தனை?

A) 1

B) 2

C) 3

D) 4

**56)** யார், கோவலன் கண்ணகி கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்று இளங்கோவடிகளிடம் கூறினார்?

A) சீத்தலைச்சாத்தனார்

B) திருத்தக்கத்தேவர்

C) நாதகுத்தனார்

D) வளையாபதியின் ஆசிரியர்

**57)** பின்வரும் செய்திகளில் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களைப் பற்றிய தவறானது எது?

A) 1974ல் நோபல் பரிசுக்கு இணையான 'மகசேசே விருது' இவரின் இசைக்குக் கிடைத்த மகுடம்.

B) தமிழரின் பெருமையை உலகறியச் செய்ய, அமெரிக்காவின் பாராளுமன்றத்தில் தமிழ்நாட்டின் செவ்வியல் இசையைப் பாடியவர்.

C) இசைப்பேரரசி என்று நேரு பெருமகனாரால் அழைக்கப்பட்டவர்.

D) வீணைக் கலைஞரான இவரது தாயே, இவரின் முதல் குரு ஆவார்.

ETW ACADEMY

58) 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை போற்றியவர் யார்?

A) ஆவூர் மூலங்கிழார் B) மாங்குடி மருதனார்

C) ஊன் பொதிப் பசுங்குடையார் D) ஏணிச்சேரி முடமோசியார்

59) "செல்வத்தின் பயனே ஈதல் துய்ப்பேம் எனினே தப்புந பலவே" என புறநானூறில் குறிப்பிடுபவர் யார்?

A) ஊன் பொதிப் பசுங்குடையார் B) ஏணிச்சேரி முடமோசியார்

C) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். D) கூறியவரை பற்றிய தகவல் இல்லை

60) 'பிழையா நன்மொழி' என்று வாய்மையையும், 'பொய் மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்யையும் குறிப்பிடும் நூல் எது?

A) நற்றிணை B) குறுந்தொகை C) கலித்தொகை D) பதிற்றுப்பத்து

61) அறமும் அரசியலும் என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?

A) திரு.வி.கல்யாணசுந்தரனார் B) ஆறுமுக நாவலர்

C) கவிஞர் கண்ணதாசன் D) மு.வரதராசனார்

62) ஜெயகாந்தன் தனது எந்த புதினத்திற்காக சாகித்திய அக்காடமி விருது பெற்றார்?

A) ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் B) சில நேரங்களில் சில மனிதர்கள்

C) கங்கை எங்கே போகிறாள் D) பாரீசுக்குப் போ

63) இவற்றுள் நாகூர் ரூமி படைத்த புதினம் எது?

A) கடலுக்கு அப்பால் B) ஒரு புளியமரத்தின் கதை

C) கப்பலுக்கு போன மச்சான் D) சஞ்சாரம்

64) காக்கென்று என்பதன் இலக்கணக்குறிப்பு அறிக

A) தொகுத்தல் விகாரம்

B) இடைக்குறை

C) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

D) வினைத்தொகை

65) தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவன் யார்?

A) சூசையப்பர் B) இயேசு C) மேரி மாதா D) குழந்தை இயேசு

66) தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகள் காணப்படும் இலக்கியங்கள் யாவை?

1. திருவாசகம்

2. பட்டினத்தார் பாடல்

3. தனிப்பாடல் திரட்டு

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) அனைத்தும்

67) பிள்ளைத்தமிழின் மொத்த பருவங்கள் மற்றும் பாடல்களின் எண்ணிக்கை யாது?

A) 6 பருவங்கள், 60 பாடல்கள் B) 8 பருவங்கள், 64 பாடல்கள்

C) 12 பருவங்கள், 96 பாடல்கள் D) 10 பருவங்கள், 100 பாடல்கள்

68) பின்வருவனவற்றில் சிறுபொழுது அல்லாதது எது?

A) இளவேனிற் B) எற்பாடு C) யாமம் D) காலை

69) 1954இல் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் தாமரையணி விருது பெற்றபோது, அவரைத் தொட்டுத் தடவிப் பாராட்டிய பார்வை மாற்றுத்திறனாளி யார்?

A) ரதூல் கம்சதேவ் B) ஹெலன் கெல்லர்

C) ஷாயாஜி தாக்கூர் D) ஸ்டீபன் ஹாக்கிங்

70) 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -

A) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் B) மிகுந்த செல்வம் உடையவர்

C) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் D) நெறியோடு நின்று காவல் காப்பவர்

71) பிரெஞ்சு மொழியில் வெளிவந்த காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை ஜெயகாந்தன் எப்பெயரில் தமிழுக்கு மொழிபெயர்த்தார்?

A) காந்தி தந்த சுதந்திர தாகம் B) வாழ்விக்க வந்த காந்தி

C) காந்தி தந்த சுதந்திரம் D) சுதந்திர தாகம்

72) தீவகம் எனும் சொல்லுக்கு என்ன பொருள்?

A) கடல் B) கொடி C) விளக்கு D) கொடி மரம்

73) ஜெயகாந்தன் தனது எந்த திரைப்படத்திற்காக தேசிய விருது அதாவது குடியரசுத் தலைவர் விருது பெற்றார்?

A) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் B) உன்னைப்போல் ஒருவன்

C) சிலநேரங்களில் சில மனிதர்கள் D) ஊருக்கு நூறு பேர்

74) தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாக இடம்பெறும் இசைக்கருவி எது?

A) பறை B) உறுமி C) மேளம் D) நாதஸ்வரம்

75) மழைவேண்டி நிகழ்த்தப்படும் கலை யாது?

A) பொய்க்கால் குதிரை ஆட்டம் B) அர்ச்சுனன் தபசு

C) தோற்பாவைக் கூத்து D) மரப்பாவைக் கூத்து

76) பின்வருவனவற்றுள் எது ஆண்பாற் பிள்ளைத்தமிழின் கடைசி மூன்று பருவங்களில் சேராதது?

A) சிற்றில் B) சிறுபறை C) சிறுதேர் D) அம்மானை

77) குறிஞ்சித் திணையின் சிறுபொழுது யாது?

A) மாலை B) யாமம் C) வைகறை D) எற்பாடு

78) பின்வரும் கூற்றுகளில் சரியானது(வை) எது(வை)?

**கூற்று 1:** காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற அறப்போர் முறையை தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்த ஆண்டு 1906

**கூற்று 2:** வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கிய ஆண்டு 1906

A) இரு கூற்றுகளும் சரி B) இரு கூற்றுகளும் தவறு C) கூற்று 1 தவறு D) கூற்று 2 தவறு

79) பின்வருவனவற்றில் தவறாகப் பொருந்தியுள்ளது எது?

I. பல்லவர் - செப்பேடு

II. பாண்டியர் - கல்வெட்டு

III. சோழர் - மெய்க்கீர்த்தி

A) I ம் III ம் B) I ம் II ம் C) II ம் III ம் D) அனைத்தும்

80) 'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்ற திறனாய்வாளர் யார்?

A) ஆர்னால்டு B) ஜி.யு.போப் C) கால்டுவெல் D) வீரமாமுனிவர்

81) பொருத்துக:

(i) பேகன் - 1. ஔவையார்

(ii) குமணன் - 2. பரணர்

(iii) மலையமான் திருமுடிக்காரி - 3. பெருந்தலைச்சாத்தனார்

(iv) அதியமான் - 4. கபிலர்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 1 | 2 | 3 | 4 |

82) "கூர்வேல் குவைஇய மொய்ம்பின் / தேர்வுண் பாரிதண் பறம்பு நாடே!" - இச்செய்யுளில் இடம்பெறும் பிரான் மலை (பறம்பு மலை) எம்மாவட்டத்தில் உள்ளது?

A) மதுரை B) புதுக்கோட்டை C) திண்டுக்கல் D) சிவகங்கை

83) கொடுத்த பொருளில் அடுத்த பொழுதில் கவிதையாகப் பாடக்கூடிய திறமை படைத்த புலவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

A) ஆசுகவி B) வித்தாரகவி C) மதுரகவி D) சித்திரகவி

84) கணீர் என்பதன் இலக்கணக்குறிப்பு என்ன?

A) தொகுத்தல் விகாரம் B) வினைத்தொகை C) வேற்றுமைத் தொகை D) இடைக்குறை

85) "தேவதுந்துபி" என அழைக்கப்படும் இசைக்கருவி எது?

A) மேளம் B) நாதஸ்வரம் C) பறை D) உறுமி

86) தேவராட்டத்தில் எத்தனை பேர் கலந்துகொள்ளவேண்டும் என்பது மரபு?

A) 8 முதல் 13 பேர் B) 5 முதல் 11 பேர் C) 8 முதல் 11 பேர் D) 5 முதல் 13 பேர்

87) "எற்பாடு" பிரித்து எழுதுக.

A) எற் + பாடு B) ஏற் + பாடு C) எல் + பாடு D) எ + பாடு

88) 30.09.1932இல் '________' என்னும் தலைப்புடைய துண்டறிக்கை ஒன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காக, ஞானப்பிரகாசம் சிறையிலிடப்பட்டார்?

A) தமிழா! உடனே புறப்படு B) வெகுண்டெழு தமிழா! C) தமிழா! துள்ளி எழு D) தமிழா! நீதிகேள்

89) பதிற்றுப்பத்துப் பாடல்களின் இறுதியிலுள்ள பதிகங்கள்

A) செப்பேடுகள் B) மெய்கீர்த்திகள்

C) கல்வெட்டுகள் D) ஓலைச்சுவடிகள்

90) நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிற நூல் எது?

A) நற்றிணை B) புறநானூறு

C) சிறுபாணாற்றுப்படை D) மதுரைக்காஞ்சி

91) இலக்கணக் கட்டுக்கோப்புக் குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருக்கும் பாவகை?

A) வெண்பா B) ஆசிரியப்பா C) கலிப்பா D) வஞ்சிப்பா

92) பொருத்துக

(i) செப்பலோசை - 1. ஒருவர் பேசுதல் போன்ற ஓசை

(ii) அகவலோசை - 2. இருவர் உரையாடுவது போன்ற ஓசை

(iii) துள்ளலோசை - 3. தாழ்ந்து உயர்ந்து வரும் ஓசை

(iv) தூங்கலோசை - 4. சீர் தோறும் துள்ளாது வரும் ஓசை

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 3 | 1 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 2 | 1 | 4 | 3 |

93) தமிழின் முதல் அகராதியான சதுரகராதியைப் படைத்தவர் யார்?

A) அர்னால்ட் B) வீரமாமுனிவர்

C) கால்டுவெல் D) ஹீராஸ் பாதிரியார்

94) வஞ்சிப்பாவுக்கு உரிய ஓசை எது?

A) செப்பல் ஓசை B) அகவல் ஓசை C) துள்ளல் ஓசை D) தூங்கல் ஓசை

95) ஜெயகாந்தன் இலக்கியத்திற்காக பெற்ற விருதுகளிலேயே மிக உயரிய விருது எது?

A) தாமரைத் திரு B) சாகித்ய அகாதமி

C) ஞானபீட விருது D) பத்ம விபூஷன்

96) "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர் யார்?

A) ந. முத்துசாமி B) பம்மல் கே.சம்பந்தம்

C) சங்கரதாசு சுவாமிகள் D) நடிகவேள் ராதா

97) பின்வரும் கூற்றுகளில் சரியானது(வை) எது(வை)?

கூற்று 1: நீதிபதி வாஞ்சு ஆணையம் அமைக்கப்பட்டு, திருத்தணி வரையுள்ள தமிழ் நிலங்கள் மீட்கப்பட்டன.

கூற்று 2: சென்னை மாகாணத்திலிருந்து பிரித்து ஆந்திரம் அமைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு நபர் ஆணையம் படாஸ்கர் ஆணையம் ஆகும்.

A) இரு கூற்றுகளும் சரி B) இரு கூற்றுகளும் தவறு

C) கூற்று 1 தவறு D) கூற்று 2 தவறு

98) **கூற்று:** சிலப்பதிகாரம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று அழைக்கப்படுகிறது.

**காரணம்:** உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.

A) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

B) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு, காரணம் சரி

99) சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களும் எந்தப்பாவில் அமைந்தவை?

A) வெண்பா B) ஆசிரியப்பா C) கலிப்பா D) வஞ்சிப்பா

100) "ஓங்கு இரும் பரப்பின் / வங்க ஈட்டத்து தொண்டியோர்" என இராமநாதபுரம் தொண்டியைப் பற்றி குறிப்பிடும் நூல் எது?

A) முதுமொழிக்காஞ்சி B) சிலப்பதிகாரம் C) மணிமேகலை D) அகநானூறு

101) அரசபிரதிநிதி லின்லித்கோ பிரபுவின் ஆகஸ்ட் கொடைக்கு காங்கிரஸ் கொடுத்த பதிலடி?

A) வெள்ளையனே வெளியேறு இயக்கம் B) ஒத்துழையாமை இயக்கம்

C) உப்பு சத்யாகிரக இயக்கம் D) தனிநபர் சத்யாகிரக இயக்கம்

102) கிரிப்ஸ் முன்மொழிவை அடுத்து “இந்தியாவைக் கடவுளிடம் விட்டுவிடுங்கள், அது அதீதமான ஒன்றாக இருக்குமானால் அதை இயற்கையின் அராஜகப் போக்கில்கூட விட்டுவிடுங்கள்" என்று கூறியவர் யார்?

A) காந்தியடிகள் B) ஜெவகர்லால் நேரு

C) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் D) ராஜகோபாலாச்சாரி

103) முமரிமுனை தமிழகத்தின் தென்கோடி என்றால் தமிழகத்தின் வடகோடி எது?

A) சத்யமூர்த்தி சாகர் B) புலிகாட் ஏரி C) போர்டோநோவா D) திருத்தணி

104) பழனிமலையின்ம் இரண்டாவது மிக உயராமன சிகரம் எது?

A) வேம்படி சோலை B) வந்தராவ் C) கோட்டை மலை D) பாகாசுரா

105) கோயம்புத்தூர் பீடபூமியை மைசூர் பீடபூமியிலிருந்து பிரிக்கும் ஆறு எது?

A) பவானி B) நொய்யல் C) அமராவதி D) மோயர்

106) “நீண்ட காலத்திற்கு முன்னர் நாம் விதியோடு ஓர் ஒப்பந்தம் செய்தோம். இப்போது அந்த வாக்குறுதிகளை முழுமையாக அல்லது முழு அளவில் ஆனால் மிகவும் கணிசமாக மீட்கும் நேரம் வந்துவிட்டது.” என்று அரசமைப்பு நிர்ணய சபை உறுப்பினர்களிடம் உரையாற்றியவர் யார்?

A) மகாத்மா காந்தி B) சர்தார் வல்லபாய் படேல்

C) ஜெவகர்லால் நேரு D) அண்ணல் அம்பேத்கர்

ETW ACADEMY

**107)** "இந்திய அரசமைப்பின் வரைவை இந்தியர்கள் தான் உருவாக்க வேண்டும்; பிரிட்டிஷ் பாராளுமன்றம் அல்ல" என்ற கோரிக்கை இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக அதிகாரப்பூர்வமாக எப்போது எழுப்பப்பட்டது?

A) 1930 B) 1932 C) 1934 D) 1936

**108)** ஜவகர்லால் நேரு இந்திய அரசமைப்புக்கான குறிக்கோள் தீர்மானத்தை அரசமைப்பு நிர்ணயசபையில் அறிமுகப்படுத்தியது எப்போது?

A) 1946 அக்டோபர் 12 B) 1947 டிசம்பர் 13 C) 1947 அக்டோபர் 12 D) 1946 டிசம்பர் 13

**109)** உலக உணவு மற்றும் வேளாண்மைக் கழகம் (FAO), எந்த ஆண்டை சர்வதேச தினைப்பயிர்கள் ஆண்டாக அனுசரிக்கத் தீர்மானித்துள்ளது?

A) 2018 B) 2021 C) 2022 D) 2023

**110)** தமிழகத்தின் எம்மாவட்டத்தில் அதிக அளவு முந்திரி பயிரிடப்படுகிறது?

A) பெரம்பலூர் B) கடலூர் C) விழுப்புரம் D) இவையனைத்தும்

**111)** 111 அடி உயரமுள்ள வைகை அணையில் எத்தனை அடி உயரம் வரை மட்டுமே நீரை சேமிக்க முடியும்?

A) 71 அடி B) 81 அடி C) 85 அடி D) 91 அடி

**112)** இருவேல்பட்டு கிராமம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

A) ஸ்லேட்டர் கிராமம் B) கிளார்க் கிராமம்
C) குக் கிராமம் D) மைக்கேல் கிராமம்

**113)** ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மைக்கு என்ன பெயர்?

A) தொழில்நுட்ப வேலையின்மை B) பருவகால வேலையின்மை
C) கற்றோர் வேலையின்மை D) வாணிபச்சுழல் வேலையின்மை

**114)** 1972-73 ஆம் ஆண்டுகளில் தொடங்கி கடந்த நான்கு பத்தாண்டுகளில் வேலை வாய்ப்பு வளர்ச்சி, சராசரியாக எத்தனை சதவீத அளவுக்கு உயர்ந்துள்ளது?

A) 3.5 % B) 4.2 % C) 5% D) 2%

**115)** சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியை துறந்ததும் உருவாக்கிய கட்சி எது?

A) சுதந்திரா கட்சி B) இந்திய தேசிய இராணுவக் கட்சி
C) சுயராஜ்யக் கட்சி D) ஃபார்வர்ட் ப்ளாக் கட்சி

**116)** யாரால் நிறுவப்பட்ட காங்கிரஸ் வானொலி திரைமறைவில் இருந்தபடியே 1942 நவம்பர் மாதம் வரை வெற்றிகரமாகச் செயல்பட்டது?

A) ஜெயபிரகாஷ் நாராயணன் B) அருணா ஆஸப் அலி
C) உஷா மேத்தா D) சரோஜினி அம்மையார்

**117)** மொத்த நீலகிரி மலையின் மிக உயரமானச் சிகரம் மற்றும் நீலகிரி மலையின் தமிழகப் பகுதியில் உள்ள உயரமான சிகரம் முறையே?

A) தொட்டபெட்டா & ஆனைமுடி B) முக்குருத்தி & தொட்டபெட்டா
C) ஆனைமுடி & தொட்டபெட்டா D) தொட்டபெட்டா & முக்குருத்தி

**118)** இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) காகர் B) பாங்கர் C) வாக்கம் D) தேரி

**119)** இந்திய இம்பீரியல் வங்கி 1955-ஆம் ஆண்டில் எவ்வாறாக மாற்றப்பட்டது?

A) யூனியன் வங்கி B) இந்திய ரிசர்வ் வங்கி
C) இந்திய ஸ்டேட் வங்கி D) பஞ்சாப் நேஷனல் வங்கி

**120)** இந்திய ரிசர்வ் வங்கி வங்கி குறைதீர்ப்பாயத்தினை (Banking Ombudsman) அறிமுகப்படுத்திய ஆண்டு எது?

A) 1990 B) 1995 C) 2000 D) 2005

**121)** பரிவர்த்தனைக்காக காத்திருக்கும் நேரம் ஏதும் இல்லாமல் நிகழ்நேரத்திலேயே கணக்கீடு ஏதும் இன்றி பரிவர்த்தனை நடைபெறும் முறை எது?

A) RTGS (ஆர்.டி.ஜி.எஸ்) B) NEFT (நெ.ஃப்ட்) C) A & B D) ஏதுமில்லை

**122)** "கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறிமாறி அதிகரிக்கிறதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது" என்றவர் யார்?

A) J.M. கீன்ஸ் B) J.B. சே
C) லர்னர் D) பிட்ஸ் பாரீஸ்டர்

**123)** இடைக்கால இந்திய வரலாற்றுக் காலத்தில், வேலைவாய்ப்பின்மைச் சிக்கலைத் தீர்ப்பதற்காக "வேலைவாய்ப்பு அலுவலகத்தை" அமைத்தவர் யார்?

A) பெரோஸ் ஷா துக்ளக் B) குத்புதீன் ஐபக் C) ஹுமாயூன் D) அக்பர்

**124)** "திவாலாகும் வங்கியில் பின் தேதியிட்ட காசோலை" என்று யார் எதைப் பற்றி விமர்சித்தார்?

A) நேரு, வேவல் திட்டம் பற்றி B) காந்தி, கிரிப்ஸ் முன்மொழிவு பற்றி
C) நேரு, கிரிப்ஸ் முன்மொழிவு பற்றி D) காந்தி, வேவல் திட்டம் பற்றி

**125)** 1942 ஜூலை 14இல் எங்கு கூடிய காங்கிரஸ் செயற்குழுவில் நாடுதழுவிய "சட்டமறுப்பு" போராட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது?

A) வர்தா B) லாஹூர் C) சூரத் D) முல்தான்

**126)** ஆழியாறு அனை, திருமூர்தி அணை, காடம்பாறை நீர்மின் நிலையம் ஆகியவை எம்மலையின் அடிவாரத்தில் காணப்படுகின்றன?

A) பழனிமலை B) சேர்வராயன் மலை C) கல்வராயன் மலை D) ஆனைமலை

**127)** தென்பெண்ணையாறு, கெடிலம் மற்றும் பெண்ணையாறு என இரண்டு கிளைகளாக பிரியும் இடம் எது?

A) அணைக்கரை அனைக்கட்டிற்கு அருகில்
B) திருவண்ணாமலை அனைக்கட்டிற்கு அருகில்
C) திருக்கோவிலூர் அனைக்கட்டிற்கு அருகில்
D) கெடிலம் அனைக்கட்டிற்கு அருகில்

ETW ACADEMY

**128)** இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 இன் படி என்று முதல் இந்திய ரிசர்வ் வங்கி தனது பணியினைத் துவங்கியது?

A) ஏப்ரல் 1, 1935 B) ஜனவரி 1, 1935 C) ஜனவரி 26, 1935 D) ஏப்ரல் 14, 1935

**129)** 1982 - ஆம் ஆண்டிற்கு பிறகு விவசாய கடன் / ஊரகக் கடன் சம்பந்தமான அனைத்து பொறுப்புகளையும் இந்திய ரிசர்வ் வங்கி யாரிடம் அளித்தது?

A) IDBI வங்கி B) ICICI வங்கி

C) NABARD வங்கி D) RRB - ARDC வங்கி

**130)** இந்திய வரைபடத்தைப் பிரிவினைக்கேற்றவாறு மாற்றி வரைவதற்கு லண்டனிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டவர் யார்?

A) மௌண்ட்பேட்டன் பிரபு B) ராட்க்ளிஃப்

C) கிரிப்ஸ் D) சர் தாமஸ் மன்றோ

**131)** இந்தியாவிலுள்ள வங்கிகளை நாட்டுடைமையாக்கியவர் யார்?

A) நேரு B) இந்திரா காந்தி C) ராஜீவ் காந்தி D) வி.பி. சிங்

**132)** தேயிலை பயிரிடப்படும் பரப்பின் அடிப்படையில், தமிழகம் எவ்விடத்தில் உள்ளது?

A) முதலிடம் B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) ஐந்தாமிடம்

**133)** மண் - கல் கலவையால் கட்டப்பட்ட நாட்டின் மிகப்பெரிய அணைகளில் ஒன்று.

A) ஆழியாறு அனை B) சத்யமூர்த்தி சாகர் அணை

C) பவானி சாகர் அணை D) கிராண்ட் அணைகட்

**134)** 1776ஆம் ஆண்டு "நாடுகளின் செல்வம் பற்றிய இயல்பு மற்றும் காரணங்கள்" என்ற புத்தகத்தை வெளியிட்டவர் யார்?

A) ஆடம் ஸ்மித் B) J.M. கீன்ஸ் C) லயனஸ் ராபின்ஸ் D) J.B. சேய்

**135)** பின்வருவனவற்றுள் பொதுத்துறை நிறுவனம் அல்லாதது எது?

A) டாடா இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை B) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்

C) இந்திய உருக்கு ஆணையம் D) பாரத தொலைபேசி நிறுவனம்

**136)** 1944 ஏப்ரலில் காங்கிரஸ் தலைவர்கள் பலரும் சிறையில் இருந்த நிலையில் சுமூகமானத் தீர்வை எட்டும் பொருட்டு ஒரு முன்மொழிவுத் தீர்மானத்தை வழங்கியவர் யார்?

A) இராஜகோபாலாச்சாரி B) அரசப்பிரதிநிதி வேவல்

C) ஜெவகர்லால் நேரு D) ஜெயபிரகாஷ் நாராயணன்

**137)** 1967 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காவலூர் வானவியல் தொலைநோக்கி மையம் எங்கு அமைந்துள்ளது?

A) ஜவ்வாது மலை B) கல்வராயன் மலைகள்

C) கொல்லிமலை D) பச்சை மலை

ETW ACADEMY

**138)** தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் எது?

A) நீலகிரி B) திண்டுக்கள் C) தேனி D) தர்மபுரி

**139)** இந்திய ரிசர்வ் வங்கி பின்வரும் எதை வெளியிடுவதில்லை?

A) ஐந்து ரூபாய் காகிதப் பணம்
B) பெரு மதிப்புள்ள காகிதப் பணம்
C) நாணயங்கள் மற்றும் ஒரு ரூபாய் காகிதப் பணம்
D) மேற்கண்ட எதுவுமில்லை

**140)** "மாறும் ரொக்க இருப்பு விகிதத்தை" முதன்முதலாக அமல்படுத்திய அமைப்பு எது?

A) இங்கிலாந்து வங்கி
B) ஸ்வீடன் நாட்டு ரிக்ஸ் வங்கி
C) அமெரிக்க பெடரல் ரிசர்வ் சிஸ்டம்
D) பெல்ஜியம் வங்கி

**141)** "தன்னாட்சி என்பது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இந்தியர்களுக்கு வழங்கப்படும் கொடையாக இல்லாமல் இந்தியர்களால் சுதந்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட, இந்தியர்களின் விருப்பத்தைவெளிப்படுத்தும் பிரதிநிதிகளிடமிருந்து உருவாக வேண்டும்" என்று கூறியவர் யார்?

A) அன்னிபெசன்ட் அம்மையார்
B) பால கங்காதர திலகர்
C) மகாத்மா காந்தியடிகள்
D) அண்ணல் அம்பேத்கர்

**142)** மாநில உள்நாட்டு மீன் உற்பத்தியில் 10 சதவீத உற்பத்தியுடன் முன்னிலையில் உள்ள மாவட்டம் எது?

A) திருப்பூர்
B) கன்னியாகுமரி
C) வேலூர்
D) திருவண்ணாமலை

**143)** தமிழ்நாட்டின் மிகக் குறைவான நீளங்கொண்ட தேசிய நெடுஞ்சாலை எது?

A) NH - 685 B) NH - 785 C) NH - 786 D) NH - 686

**144)** இந்தியா போன்ற வளரும் நாடுகளில் உழைப்பாளர் குழுவின் பெரும்பகுதியினர் எந்தத்துறையில் இருப்பர்?

A) முதன்மைத் துறை
B) இரண்டாம் துறை
C) மூன்றாம் துறை
D) மேற்கண்ட அனைத்தும்

**145)** இஸ்லாமியர்களின் தனிநாடு கோரிக்கை 1940 மார்ச் 23இல் எங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் முக்கியக் கட்டத்தை எட்டியது?

A) பூனே B) முல்தான் C) லாகூர் D) பெஷாவர்

**146)** இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சோதனை உந்துவிசை செயற்கைக்கோள் ஏவுதளம் எம்மலையின் அடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது?

A) சேர்வராயன் மலை
B) மகேந்திரகிரி மலை
C) ஜவ்வாது மலை
D) ஆனைமலை

**147)** தமிழகத்தில் உள்ள உயிர்கோளப் பெட்டகங்களில் சேராதது எது?

A) ஆழியாறு உயிர்க்கோளப் பெட்டகம்
B) நீலகிரி உயிர்க்கோளப் பெட்டகம்
C) மன்னார் வளைகுடா உயிர்க்கோளப் பெட்டகம்
D) அகத்தியர் மலை உயிர்க்கோளப் பெட்டகம்

**148)** பின்வரும் யாரால் ஒரு ரூபாய்க்கு 40 செம்பு நாணயங்கள் என்ற விகிதத்தில் முதல் ரூபாய் வெளியிடப்பட்டுள்ளது?

A) இல்துமிஷ் B) ஷெர்ஷா சூரி C) சமுத்திரகுப்தர் D) அசோகர்

**149)** இந்தியாவில் பயோ மெட்ரிக் முறையில் அறிந்து பணம் வழங்கும் முறைகள் எந்த வங்கியின் ஏ.டி.எம் இயந்திரங்களில் பயன்படுத்தப்படுகிறது?

A) பாரத ஸ்டேட் வங்கி B) சிட்டி யூனியன் வங்கி
C) கத்தார் தேசிய வங்கி D) இந்திய யூனியன் வங்கி

**150)** அரசமைப்பு வரைவுக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.ஆர். அம்பேத்கர், எம்மாகாணத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்?

A) பஞ்சாப் B) பம்பாய் C) வங்காளம் D) பீஹார்

**151)** சாத்தனூர் அணை எம்மலையின் நடுவே அமைந்துள்ளது?

A) சென்ன கேசவ மலை B) ஆனைமலை C) ஏலகிரி மலை D) ஜவ்வாது மலை

**152)** தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) எங்கு அமைந்துள்ளது?

A) கரூர் B) ஈரோடு C) சேலம் D) நாமக்கல்

**153)** 2011-12 காலப்பகுதியில் வேலைவாய்ப்பில் முதன்மைத் துறையின் பங்களிப்பு எவ்வளவு?

A) 27 % B) 24 % C) 49 % D) 74 %

**154)** ஜெவகர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசு எப்போது அமைக்கப்பட்டது?

A) 1945 டிசம்பர் B) 1946 ஜூன் C) 1946 செப்டம்பர் D) 1946 நவம்பர்

**155)** வடக்கே நீலகிரி முதல் தெற்கே கன்னியாகுமரி மாவட்ட சுவாமிதோப்பில் உள்ள மருதுவாழ்மலை வரை நீண்டுள்ள மலைத்தொடர் எது?

A) மேற்குத்தொடர்ச்சி மலை B) கிழக்குத்தொடர்ச்சி மலை
C) பழனி மலைத்தொடர் D) பொதிகை மலைத்தொடர்

**156)** சர்வதேச பண நிதியத்தின் (International Monetary FunD) இந்திய உறுப்பினர் பிரதிநிதியாக விளங்கும் அமைப்பு எது?

A) நிதி ஆணையம் B) நிதி ஆயோக் C) இந்திய ரிசர்வ் வங்கி D) நிதிக் குழு

**157)** பணமதிப்பு நீக்கத்தின்படி, பழைய 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் தாள்கள் நீக்கப்பட்டது. அவ்வாறு மதிப்பு நீக்கப்பட்ட பணத்தின் மொத்த மதிப்பில் எத்தனை சதவிகிதம் இந்திய ரிசர்வ் வங்கிக்கு திரும்பியது?

A) 99% B) 78% C) 54% D) 89%

**158)** இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மையான சிற்பி யார்?

A) மகாத்மா காந்தி B) அண்ணல் அம்பேத்கர்
C) கோபால கிருஷ்ண கோகலே D) ஜெவகர்லால் நேரு

ETW ACADEMY

**159)** இந்தியாவின் மொத்த செம்மணிக்கல் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு என்ன?

A) 75 % B) 59 % C) 52 % D) 55.3 %

**160)** தமிழகத்தில், கொண்டைக்கடலை உற்பத்தியில் எம்மாவட்டம் முதலிடம் வகிக்கிறது?

A) திண்டுக்கல் B) தேனி

C) மதுரை D) கோயம்புத்தூர்

**161)** பின்வருபவனவற்றுள் எது / எவை தற்கால வேலைவாய்ப்பு போக்குகள் ஆகும்?

1. அதிகரித்துவரும் சுய-வேலைவாய்ப்பு

2. குறைந்துவரும் சுய-வேலைவாய்ப்பு

3. நிறுவனங்கள் பெருமளவில் நிரந்தர ஊழியர்களை பயன்படுத்துதல் மற்றும் நீண்ட கால ஒப்பந்தப் பணிகளைத் தருதல்

4. நிறுவனங்கள் ஒரு சில நிரந்தர ஊழியர்களையே பயன்படுத்துதல் மற்றும் குறுகிய கால ஒப்பந்தப் பணிகளைத் தருதல்

5. பகுதி நேர வேலைவாய்ப்பில் ஒரு வளர்ச்சி இருந்து வருகிறது.

A) 2, 3 & 5 B) 1, 4 & 5

C) 1, 2,3 & 4 D) மேற்கண்ட அனைத்தும்

**162)** தமிழ்நாட்டின் ஒரே வற்றாத ஜீவ நதி எது?

A) தாமிரபரணி B) அமராவதி C) பவானி D) காவிரி

**163)** வங்கி கலையின் அடிப்படையில் 1864 இல் தோற்றுவிக்கப்பட்டு பணத்தை வெளியிட்ட முதல் மைய வங்கி எது?

A) ஸ்பெயின் வங்கி B) இத்தாலி வங்கி

C) ஜெர்மன் வங்கி D) இங்கிலாந்து வங்கி

**164)** ஏப்ரல் 1955இல் நடைபெற்ற எம்மாநாட்டில் சீனாவையும் அதன் தலைவரான சூ - யென் - லாயும் முன்னிலைப்படுத்த நேரு சிறப்பான முயற்சிகள் எடுத்தார்?

A) பீஜிங் மாநாடு B) பாண்டுங் மாநாடு

C) ஊஹான் மாநாடு D) டோக்கியோ மாநாடு

**165)** 2017 தமிழ்நாடு புள்ளியியல் கையேட்டின்படி, தமிழகத்தில் உள்ள ஏரிகளின் எண்ணிக்கை என்ன?

A) 41,127 B) 81 C) 17 D) 156

**166)** எந்த அணையிலுள்ள தோட்டம் "சிறிய பிருந்தாவனம்" என்றழைக்கப்படுகிறது?

A) முல்லை-பெரியாறு அணை B) மணிமுத்தாறு அணை

C) வைகை அணை D) மேட்டூர் அணை

**167)** பின்வருபவனவற்றுள் "சேவை நோக்கம்" கொண்டது எது?

A) பொதுத் துறை B) தனியார் துறை

C) அமைப்புசாராத் துறை D) ஒழுங்கமைக்கப்படாத துறை

ETW ACADEMY

**168)** தமிழ்நாட்டின் மிக அதிக மழை பெறும் பகுதி எது?

A) மேட்டுப்பாளையம் B) குந்தா C) சின்னக்கல்லார் D) ஊட்டி

**169)** பின்வரும் யாருடைய 20-அம்ச பொருளாதர திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் கிராமப்புறங்களில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களை தொடர் கடன்சுழலில் (indebtedness) இருந்து விடுவிப்பதாகும்?

A) ஜெவகர்லால் நேரு B) நரசிம்மராவ் C) மொராஜி தேசாய் D) இந்திரா காந்தி

**170)** பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், எவ்விரு மாவட்டங்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது?

A) தமிழகம் & கர்நாடகா B) தமிழகம் & தெலுங்கானா

C) தமிழகம் & ஆந்திரா D) தமிழகம் & கேரளா

**171)** உழைப்பாளர் குழுவைக் கணக்கிடுவதில் ____ முதல் ___ வரையிலான வயதுடையவர்கள்வர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவர்.

A) 18 முதல் 55 வரை B) 15 முதல் 55 வரை

C) 18 முதல் 60 வரை D) 15 முதல் 60 வரை

**172)** பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைக்கப்பட்ட ஐந்து இணை வங்கிகளில் சேராதது எது?

A) பைக்கனர் ஸ்டேட் வங்கி

B) ஜெய்பூர் ஸ்டேட் வங்கி & மைசூர் ஸ்டேட் வங்கி

C) மணிப்பூர் ஸ்டேட் வங்கி & திரிபுரா ஸ்டேட் வங்கி

D) பாட்டியாலா ஸ்டேட் வங்கி & திருவாங்கூர் ஸ்டேட் வங்கி

**173)** தமிழ்நாட்டின் ஜவுளிப் பள்ளத்தாக்கு என்றழைக்கப்படும் பகுதி?

A) ஈரோடு, சேலம், கரூர் B) கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு

C) ஈரோடு, கரூர், திருப்பூர் D) கரூர், ஈரோடு, சேலம்


**174)** விவசாய மறுகடன் மேம்பாட்டு கழகம் எப்போது துவங்கப்பட்டது?

A) ஜூன் 1, 1963 B) ஏப்ரல் 1, 1973 C) ஜூலை 1, 1963 D) மே 1, 1973

**175)** இந்தியாவின் மொத்த பழுப்பு நிலக்கரி உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு என்ன?


A) 75 % B) 59 % C) 52 % D) 55.3 %

**176)** * - ற்கு எதிர்ப்பக்கம் உள்ளது எது?



A) @ B) $ C) 8 D) +


**177)** கீழ்காணும் இரு பகடைகளை வைத்து ஐந்து புள்ளிகள் உள்ளப் பக்கத்திற்கு எதிரே எத்தனை புள்ளிகள் உள்ளன எனக் கூறுக?



A) 3 B) 1 C) 2 D) 4


ETW ACADEMY

**178)** கீழ்காணும் பகடைகளை வைத்து 4-ந் எதிர்புறம் உள்ள எண் எதுவெனக் காண்க:





A) 3 B) 5 C) 6 D) 2

**179)** 5-ன் எதிர்ப்பக்கம் உள்ள எண்?





A) 5 B) 2 C) 6 D) 4

**180)** இரண்டு புள்ளிகள் உள்ள பக்கத்திற்கு எதிர்ப் புறம் உள்ள புள்ளிகளின் எண்ணிக்கை?




A) 1 B) 5 C) 4 D) 6

**181)** எண் 6-ற்கு எதிர்ப்பக்கம் உள்ள எண்?





A) 4 B) 1 C) 2 D) 3

**182)** எண் 1 - ற்கு எதிர்பக்கம் உள்ள எண்?





A) 3 B) 5 C) 2 D) 6

**183)** எண் 4-ற்கு எதிர்ப்பக்கம் உள்ள எண்?





A) 1 B) 2 C) 5 D) 6

**184)** இரண்டு புள்ளிகளுக்கு எதிரே எத்தனை புள்ளிகள் இருக்கும்?



A) 2 B) 3 C) 5 D) 6


**185)** 2 புள்ளிகள் உள்ளப் பக்கத்திற்கு எதிரே உள்ள பக்கத்தில் எத்தனை புள்ளிகள் இருக்கும்?



A) 6 B) 5 C) 4 D) 1


ETW ACADEMY

**186)** '+' என்றக் குறியீடு உள்ளப் பக்கத்திற்கு எதிரே உள்ளப் பக்கத்தில் உள்ளக் குறியீடு?





A) % B) - C) x D) $

**187)** 5-ற்கு எதிர்புறம் உள்ள எண்?




A) 1 B) 2 C) 3 D) 4

**188)** மஞ்சள் நிறத்திற்கு எதிர்புறத்தில் உள்ள நிறம்?




A) வைலட் B) சிவப்பு C) ரோஸ் D) நீலம்

**189)** ஒரு மனிதனைப் பார்த்து முருகன் இவ்வாறு கூறினார். "அவர் என் சகோதரியின் சகோதரனின் தந்தையின் ஒரே மகன்" எனில் முருகன் கூறிய அவர் யார்?

A) மாமா (அ) சித்தப்பா B) தந்தை C) மாமா (அ)பெரியப்பா D) அவரே

**190)** கங்காவை அறிமுகம் செய்து ரமேஸ் கூறினார் "அவள் என் அப்பாவின் ஒரே மகனின் மனைவி" எனில் கங்கா அவரது (ரமேஸ்) அம்மாவிற்கு என்ன உறவு?

A) மகள் B) மருமகள் C) சகோதரி மகள் D) மைத்துனி

**191)** ஒருவளைப் பார்த்து ஒருவன் சொன்னான். அவள் என் தாயாரின் ஒரே மகள். அந்தப் பெண் அவருக்கு எந்த முறையில் உறவு?

A) பாட்டி B) அத்தை C) தாய் D) சகோதரி

**192)** ஒருவன் ஒருத்தியை அறிமுகப்படுத்திக் கூறியது "அவளது ஒரே சகோதரன் என்னுடைய அப்பாவின் ஒரே மகன்" என்று கூறினார். அவள் அந்த ஒருவனின் அப்பாவிற்கு எந்த வகை உறவு?

A) மனைவி B) சகோதரி C) மகள் D) மருமகள்

**193)** ஒரு மனிதனை அறிமுகப்படுத்தி ஒருத்தி கூறினாள் "என் தாயின் தாய்க்கு அவர் ஒரு மகன்". அந்த ஆணிற்கும் பெண்ணிற்கும் உள்ள உறவு வகை எது?

A) சகோதரியின் மகள் B) தாய் C) சகோதரி D) அத்தை

**194)** ஒரு பெண் ஒரு ஆணிடம் "நீங்கள் என்னுடைய தாத்தாவினுடைய ஒரே மகனின் மகன்" என்று கூறினாள் அந்த ஆணுக்கு பெண் என்ன உறவு?

A) மருமகள் B) சகோதரி (அ) மனைவி

C) தாய் D) சகோதரி (அ) மருமகள்

ETW ACADEMY

**195)** ஒரு ஆணைப்பார்த்து ஒரு பெண் கூறுகிறாள் "அந்த ஆண் யார் என்றால் எனது அம்மாவின் அப்பாவின் ஒரே மருமகன்" அந்த ஆணுக்கு பெண் என்ன உறவு?

A) அத்தை B) மகள் C) சகோதரி D) மனைவி

**196)** ஒரு போட்டோவிலுள்ள ஆணைப் பார்த்து ஒரு பெண் கூறுகிறாள்"என் அம்மாவின் அப்பாவின் ஒரே மகன்" என்று. அப்படியானால் அந்த ஆணுக்கு பெண் என்ன உறவு?

A) மருமகள் B) சகோதரி C) தாய் D) மகள்

**197)** ஒரு ஆணைக் காட்டி பெண் கூறுகிறார் "எனது கணவருடைய மனைவியின் மகளுடைய சகோதரன்" அந்த பெண்ணிற்கு ஆண் என்ன உறவு?

A) மகன் B) கணவன் C) மைத்துனர் D) மருமகன்

**198)** மேடையில் பரிசு வாங்கிய ஆணைக் காட்டி ஒரு பெண் கூறியது "அவர் எனது மாமாவினுடைய மகளின் சகோதரன்" எனில் அந்தப் பெண் ஆணிற்கு என்ன உறவு?

A) மகன் B) உறவினர்

C) மாமா D) மைத்துனி (அ) மதினி

**199)** ஒரு ஆணை அறிமுகப்படுத்தி ஒரு பெண் கூறுகிறாள் "அவர் யாரென்றால் எனது அம்மாவின் அம்மாவுடைய ஒரே மகன்" அந்த ஆணிற்கு பெண் என்ன உறவு?

A) தாய் B) அத்தை

C) சகோதரி D) உடன்பிறந்தோர் மகள்

**200)** ஒரு பெண்ணைப் பார்த்து ஆண் கூறுவதாவது "நீ எனது தாயின் ஒரே மகனுடைய மனைவி" எனில் அந்த ஆணுக்கு பெண் என்ன உறவு?

A) சகோதரி B) அத்தை C) மகள் D) மனைவி

***

© ETW Academy